**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2023**
**C011 இருபதாம் நூற்றாண்டு கவிஞர் இருவர்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1 இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பாரதி 'தெய்வம்' என்று எவற்றைக் குறிப்பிடுகிறார்?
2. தமிழ்ப் பத்திரிகையின் தந்தை எனப் பாராட்டப்பெற்றவர் யார்?
3. குயில் இரண்டாம் மூன்றாம் நாட்களில் யாது செய்தது?
4. பாரதியார் மக்கள் சக்தியை எதற்கு ஒப்பிடுகிறார்?
5. ஆங்கிலக் கல்வியின் விளைவால் நேர்ந்த அவலம் யாது?
6. பெண் விடுதலைக்காக என்ன முறையைக் கையாளுமாறு பாரதியார் அறிவுறுத்துகிறார்?
7. கல்வியை எந்த மொழியில் கொடுக்க வேண்டும் என்று பாரதியார் குறிப்பிடுகிறார்?
8. பாரதியாருக்கு முன்பு சமுதாயச் சிந்தனை உடைய பாடல்களைப் பாடியவர்கள் யாவர்?
9. உலகம் யாரால் உருவானது என்று பாரதிதாசன் கூறுகிறார்?
10. கல்வியில்லாத சமுதாயம் எது போன்றது?
11. வீரத்தாய் என்னும் காவியத்தில் மன்னன் மகன் சுதர்மனைச் சேனாதிபதி எவ்வாறு வளரச் செய்தான்?
12. பெற்றோர் ஆவல் என்னும் பாடலில் பாரதிதாசன் குறிப்பிட்டுள்ள தமிழ் இசைக் கருவி யாது?
13. நற்றமிழர் சேர்த்த புகழ் யாது?
14. தமிழ் நாட்டை எவ்வாறு பாரதிதாசன் வாழ்த்துகிறார்?
15. பாரதிதாசன் குறிப்பிடும் மூவகை வாழ்க்கை யாவை?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பாரத மக்களின் ஒற்றுமையைப் பாரதி எவ்வாறு வலியுறுத்துகிறார்?
2. பாரதி புதுவை செல்ல நேர்ந்தமைக்குரிய காராணம் யாது?
3. பெண்களுக்கான உரிமைகளாகப் பாரதி கூறுவன யாவை?
4. பாரதியாரின் சமயக் கொள்கை குறித்து அவரது மாணாக்கர் ரா.கனகலிங்கம் கூறுவன யாவை?
5. புதுவை அரசு கொண்டிருந்த முற்போக்குத் திட்டங்கள் யாவை?
6. மலையின் அழகைப் பாரதிதாசன் எவ்வாறு எடுத்துரைக்கிறார்?
7. தலைவியின் தமிழ் உணர்வை பாரதிதாசன் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?
8. 'நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்' என்பதைக் குடும்ப விளக்கில் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பாரதியார் பெண் விடுதலை, பெண்ணுரிமைச் சிந்தனைகளுக்கு வித்திட்டிருப்பதை அவர் படைப்புகளைக் கொண்டு நிறுவுக.

(அல்லது)

(ஆ) காதல், குடும்ப வாழ்வு ஆகியவற்றில் பெண் தலைமையேற்கும் நிலைக்கு உரியவள் என்பதைப் பாரதிதாசன் வழி விளக்குக.

2. (அ) இந்திய விடுதலை இயக்கங்களில் ஈடுபாடு கொண்ட பாரதியின் அரசியல் வாழ்வை விவரி.

(அல்லது)

(ஆ) ஒரு குடும்பம் எப்படி இருக்கக்கூடாது என்பதற்கு இருண்ட வீடு கவிதை வழி விளக்குக.

3. (அ) பாரதியின் முப்பெரும் கோட்பாடுகளை இனங்கண்டு தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழ் மொழி, தமிழ் மக்கள், தமிழ்நாடு இவற்றின் மீது பாரதிதாசன் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றுதலை விளக்குக.

❋❋❋